# நவம்பர் மாதப் பாடங்கள்

## செய்யுள்

### சிங்கி பெற்ற பரிசு

I. குறுவினா

1. சிங்கிக்குப் பரிசாகக் கிடைத்த அணிகலன்கள் யாவை?

* சிலம்பு
* தண்டை
* பாடகம்.
* மாணிக்கச்சம்
* கால் மோதிரம்.
* பீலி

2. சிங்கன் தான் எதனைக் கண்டு அஞ்சுவதாகக் கூறினான்?

சிங்கன் தான் சிங்கியையும் அவள் அணிகலன்களையும் கண்டு அஞ்சுவதாகக் கூறினான்.

II. சிறுவினா:

1. கலிங்க நாட்டாரும், கண்டிய நாட்டாரும் சிங்கிக்கு வழங்கிய பரிசுகள் யாவை?

* கலிங்க நாட்டார் முறுக்குகள் நிறைந்த தண்டையைச் சிங்கிக்குப் பரிசாக வழங்கினர்.
* கண்டிய நாட்டார் கால் மோதிரத்தையும் பீலியையும் சிங்கிக்குப் பரிசாக வழங்கினர்.

புத்தகப் பயிற்சி பக்க எண்; 116-ல் உள்ளதை படிக்க வைக்கவும்.

Scanned with OKEN Scanner

# இயல் - 6

## உரைநடை

### பாரத ரத்னா எம்.ஜி. இராமச்சந்திரன்

I. குறுவினா:

1. எம்.ஜி.ஆர். நாடகத்துறையில் ஈடுபடக் காரணம் என்ன?

* வறுமை காரணமாகவே எம்.ஜி.ஆரும், அவருடைய அண்ணனும் பள்ளிப் படிப்பைத் தொடர முடியாமல் நாடகக் குழுவில் சேர்ந்தனர்.

2. திரைத்துறையில் எம்.ஜி.ஆரின் பன்முகத் திறமைகள் யாவை?

திரைத்துறையில் எம்.ஜி.ஆர். அவர்கள் நடிகர், தயாரிப்பாளர், இயக்குநர் எனப் பன்முகத் திறமை கொண்டு விளங்கினார்.

3. எம்.ஜி.ஆரின் சமூக நலத்திட்டங்களுள் நான்கனை எழுதுக.

* உழவர்களின் கடன் தள்ளுபடி.
* தாய் சேய் நல இல்லங்கள்
* ஏழைகளுக்கான வீட்டு வசதித் திட்டம்
* ஆதரவற்ற மகளிருக்குத் திருமண உதவித்திட்ட

II. சிறுவினா பாடநூலில் குறித்துக் கொடுத்து படிக்க வைக்கவும்.

புத்தகப் பயிற்சி பக்க எண்: 121-ல் உள்ளதை படிக்க வைக்கவும்.

இயல் – 6

## துணைப்பாடம்

# ஒருவன் இருக்கிறான்

## குறிப்புச் சட்டகம்

* முன்னுரை
* குப்புசாமி
* நண்பனின் உதவி
* குப்புசாமிக்கு வீரப்பன் எழுதிய கடிதம்
* மனிதநேயம்
* ஒருவன் இருக்கிறான்
* முடிவுரை

### முன்னுரை:

துணையின்றி வாழும் நிலை இரங்கத்தக்கது! எப்படிப்பட்டவருக்கும் ஒரு துணை இருக்கும் என்ற கருத்தை வெளிப்படுத்துகிறது. அழகிரிசாமியின் "ஒருவன் இருக்கிறான்" என்ற சிறுகதை. எத்தனை உறவுகள் இருந்தாலும் வறுமையாலும் குப்புசாமிக்கு உதவி செய்தவர் அவரது நண்பர் வீரப்பன். மனித நேயத்தை துளிர்க்கச் செய்யும் நிகழ்வை இச்சிறுகதை வழி காண்போம்.

### குப்புசாமி:

வீரப்பனின் உயிர் நண்பன் குப்புசாமி. குப்புசாமிக்கு தாய் தந்தை கிடையாது.

குப்புசாமி காஞ்சிபுரத்திலுள்ள தாய்மாமன் வீட்டில் தங்கி சைக்கிள் கடையில் தினக்கூலியாக வேலைசெய்து வந்துள்ளான் அவன் ஆறேழு மாதங்களாக வயிற்றுவலியால் அவதிப்பட்டான். இதனால் அவனுக்கு சரியான வேலையும் இல்லாமல் போயிற்று. தாய்மாமன் வீட்டிலிருந்து விரட்டிவிடப்பட்ட குப்புசாமி வைத்தியம் பார்ப்பதற்காக சித்தியை நம்பி சென்னைக்கு செல்கிறான்.

**நண்பனின் உதவி:**

குப்புசாமியின் நண்பன் வீரப்பன் வீடு கட்டுகிற ஒரு மேஸ்திரியிடம் சிப்பந்தியாக வேலை செய்பவன். குப்புசாமி நோய் காரணமாக வேலையை இழந்து தாய்மாமன் வீட்டில் துன்பப்பட்டுக் கொண்டிருந்த போது வீரப்பன் தான்,

- குப்புசாமிக்கு அடிக்கடி சாப்பாடு போட்டு வந்துள்ளான்
- வேலை இல்லை என்றாலும் கடன் வாங்கியாவது

குப்புசாமிக்கு உதவிகள் செய்துள்ளார். இது வீரப்பன் "ஏழ்மையிலும் உதவும் குணம் படைத்தவர்" என்பதைக் காட்டுகிறது.

**குப்புசாமிக்கு வீரப்பன் எழுதிய கடிதம்:-**

சென்னையில் தன் உறவினர் வீட்டில் இருந்த குப்புசாமிக்கு வீரப்பன் கடிதம் எழுதினான் அதில், "நண்பா! நீ இங்கிருந்து போனதிலிருந்து

என் உயிர் இங்கே இல்லை. சதா உன் ஞாபகமாகத்தான் இருக்கிறேன். உன் உடல்நலம் சரியாக வேண்டுமென்று தினமும் கோவிலுக்குப் போய் சாமி கும்பிடுகிறேன் என்று எழுதியிருந்தான்.

* மூன்றுரூபாய் கடன் வாங்கி சென்னைக்குச் செல்லும் கட்டைத் தொட்டு ஆறுமுகத்திடம் கொடுத்து அனுப்பியிருக்கிறேன்
* நான் நேரில் வந்தால் இந்த மூன்று ரூபாயும் பேருந்துக்குச் செலவாகிவிடும். எனவே, அது உனக்கு உதவியாக இருக்கும் என நினைத்து, கொடுத்து அனுப்பியிருக்கிறேன்
* இன்னோர் இடத்திலும் பணம் கேட்டிருக்கிறேன். கிடைத்தால் நான் சீக்கிரம் உன்னைப் பார்க்க வருவேன். உன்னைப் பார்த்தால் தான் நான் தின்னும் சோறு, சோறாக இருக்கும்' என்று எழுதியிருந்தான்.

மனிதநேயம்:

உலகமே வெறுத்து ஒதுக்கிய குப்புசாமியிடம் உயிரையே வைத்திருந்தான் வீரப்பன். ஏழையாக இருந்தாலும் கடன் வாங்கியாவது நண்பனின் உயிரைக் காக்க வேண்டும் என்று எண்ணிய வீரப்பன் உண்மையிலேயே மனிதநேயத்தின் மறு உருவம் தான்.

ஒருவன் இருக்கிறான்:-

குப்புசாமி ஊரிலிருந்து வந்ததே

படிக்காமல் இருந்த தங்கவேலுவின் பக்கத்து வீட்டுக்காரர், குப்புசாமிக்கும் ஒருவன் இருக்கிறான் என்பதை கடிதத்தின் வாயிலாக அறிந்து கண்ணீர் சிந்தினார்.

<u>முடிவுரை:-</u>

எப்படிப்பட்டவருக்கும் ஒரு துணை இருக்கும். அந்தத் துணைதான் மனிதத்தின் வேருக்கு நீர். அதில் மனிதம் துளிர்க்கும் என்பதை 'ஒருவன் இருக்கிறான்' என்னும் சிறுகதை நமக்கு உணர்த்துகிறது.

# இயல் – 6

## இலக்கணம்

## இடைச்சொல், உரிச்சொல்

I நிரப்புக:

1. சொற்கள் நான்கு வகைப்படும்.
2. இடைச்சொற்கள் ஐந்து வகைப்படும்.
3. பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றின் தன்மையை மிகுதிப்படுத்த வருவது உரிச்சொல் ஆகும்
4. கடி என்னும் ஒரே சொல் மணம், காவல், விரைவு, கூர்மை எனப் பல பொருள்களில் வரும்
5. பெயர், வினை என்னும் இரண்டு வகைச் சொற்களும் முன்னாலோ பின்னாலோ இணைந்து நின்று அச்சொற்களின் பொருளைத் தெளிவுபடுத்துவது இடைச்சொற்கள்.
6. பெரும்பாலும் இரு சொற்களுக்கு இடையே வருவதால் இவை இடைச்சொற்கள் எனப்படுகின்றன.
7. கடிமலர் என்பதன் பொருள் மணம் மிக்க மலர்
8. வள்ளுவன் திருக்குறளைப் பற்றி உரையாற்றினான் இத்தொடரில் உள்ள சொல்லுருபு பற்றி.

Scanned with OKEN Scanner

9. கழுவாடுதும் என்பதன் பொருள் இரையாக இடுவோம்.

10. கடிநகர் என்பதன் பொருள் காவல்மிக்க நக

11. உரிச்சொற்களில் ஒரு சொல் பல பொருள்களுக்கு உரியதாய் வருவது உண்டு.

புத்தகப்பயிற்சி பக்க எண்: 128 ல் உள்ளதை படிக்க வைக்கவும்

# நண்பனுக்கு பாராட்டுக் கடிதம்

மெட்ரோ நகர்
ஆலப்பாக்கம்
சென்னை - 116

அன்புள்ள தோழி,

நான் நலம், உன் நலம் மற்றும் உன் பெற்றோர் நலம் அறிய ஆவல். இந்த ஆண்டு உன் பள்ளியில் நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்டு உயரம் தாண்டும் போட்டியில் முதல் பரிசு பெற்றதாக எனக்கு கடிதம் எழுதி இருந்தாய். அதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். உனக்கு என் பாராட்டுகள். விளையாட்டில் மட்டுமல்ல படிப்பிலும் நீ தனி முத்திரை பதிக்க உன்னை என் மனதார வாழ்த்துகிறேன்.

நன்றி

இப்படிக்கு
உன் அன்புத்தோழி
க. சண்விகா

உறை மேல் முகவரி.

பெறுநர்:

க. வாணி
15, வடக்கு மாடவீதி,
மதுரை

Scanned with OKEN Scanner